
தமிழறிஞர்

# மயிலை சீனி. வேங்கடசாமி

## நூற்றாண்டு விழா

(1900-2000)



வாழ்க்கைக் குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறை
2000

தமிழறிஞர்

மயிலை சீனி. வேங்கடசாமி

# நூற்றாண்டு விழா

தமிழ் வளர்ச்சித் துறை

2000

3

# தமிழறிஞர்
# மயிலை சீனி. வேங்கடசாமி
# வாழ்க்கைக் குறிப்பு

தமிழ்நாட்டின் கலை, இலக்கியம், வரலாறு, சமயம், மொழி, பண்பாடு, ஆகியவற்றை எதிர்கால இளைய தலைமுறையினர் கண்டு தெளிய உழைத்த தமிழறிஞர்கள் பலர். அவர்களுள் தன்னார்வம் மிக்கவராய், நடுநிலை பிறழாதவராய், காட்சிக்கு எளியராய், தமிழின் மறைந்துபோன அடையாளங்களை - சின்னங்களை மீட்டுருவாக்க வடிவில் யாவரும் அறிய ஆய்வுப் படைப்புகளை வழங்கிச் சென்றவர் ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் தந்தை திரு. சீனிவாசன், 1922 வரை மயிலாப்பூரில் காரணீசுவரர் கோவில் தெருவில் சிறந்த சித்த மருத்துவராக வாழ்ந்தவர். இவர் அகமருந்து, புறமருந்து செய்வதிலும் இரசவாதக் கலையிலும் வல்லவராக விளங்கினார். இவர் சித்த மருத்துவத்தில் மட்டுமன்றி இலக்கண இலக்கியங்களிலும் புலமை பெற்றிருந்தார். இவருக்கு மூன்று மகன்களும் மூன்று மகள்களும் பிறந்தனர். முதல் மகன் முத்துசாமி, இரண்டாம் மகன் கோவிந்தராசன், மூன்றாம் மகன்தான் வேங்கடசாமி. இவர் 16. 12. 1900இல் பிறந்தார்.

## 4

முத்துசாமி தந்தை வழி மருத்துவரானார் ஆனால், அவர் இளமையிலேயே இயற்கை எய்தினார். கோவிந்தராசன் தமிழ்ப்புலமை நலஞ்சான்ற மயிலை சண்முகம் பிள்ளையிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அவர் "திருமயிலை நான்மணி மாலை", "திருக்குறள் காமத்துப் பால் நாடகம்'' ஆகிய இரு நூல்களையும் எழுதியுள்ளார். இளமையிலேயே அவரும் இயற்கை எய்தினார். தமிழ்ப்புலமை மிக்க குடும்பச் சூழலில் வளர்ந்த வேங்கடசாமி மயிலை புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தந்தை, தமையனார், தம் ஆசிரியர் மயிலை சண்முகம் பிள்ளை ஆகியோரிடமிருந்து பெற்ற கல்விச் செல்வம் வேங்கடசாமியின் தமிழார்வத்திற்கு வளமான கால்கோளிட்டது.

பள்ளிக் கல்வியை முடித்த வேங்கடசாமி சென்னை ஓவியக் கலைக் கல்லூரியில் சேர்ந்து ஓவியக் கலை பயிலத் தொடங்கினார். அச்சமயம் இரவது வீடு ஒரு கலைக் கூடமாகவே விளங்கியது. முன்னோர் யாவரும் வைணவ அன்பர்கள். இவர்தம் தந்தையின் மருத்துவத்தால் குட்டநோய் தீர்ந்த ஓவியர் ஒருவர் கைம்மாறாகத் தம் கைவண்ணத்தால் வீட்டின் உட்சுவர்களில் எல்லாம் வண்ணமிகு இயற்கைக் காட்சிகளும், கண்ணன் கோவர்த்தன மலையை விரலால் தாங்கி மழை வெள்ளம் தாக்காதவாறு மாடு கன்றுகளையும் பிற உயிரையும் காத்த காட்சிகளும், தெய்வ உருவங்களும், சித்தர்களும், நால்வர் வடிவங்களும் அழியா ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். இந்த ஓவியங்களின் காலம் ஏறக்குறைய 80 ஆண்டுகள் இருக்கும். வீடே ஒரு கலைக்கூடமாய் அமைந்ததால் வேங்கடசாமிக்கு இளமையிலேயே கலையார்வம் தளிர்விட்டது. அதனால்தான்

இவர் பிற்காலத்தில் தமிழர் வளர்த்த அழகுக் கலையில் நாட்டஞ் செலுத்தினார்.

குடும்பச் சூழல் சரியின்மையால் ஓவியக்கலைக் கல்லூரியிலிருந்து விடுபட்டார். மயிலை சீனி. வேங்கடசாமிக்கு அகவை 22 இருக்கும்போது இவர் தந்தையும் தமையனார் கோவிந்தராசனும் சில கால இடைவெளிக்குள் இயற்கை எய்தினர். குடும்பத்தில் வருவாய் ஈட்டும் பொறுப்பு மயிலை சீனி. வேங்கடசாமிக்குரித்தாயிற்று. இக்காலத்தில் அவருடன் இவர்தம் தமக்கையார் கனகவல்லியாரும் இருந்தார். அவர் சீனிவாசனின் மூன்றாவது மகள் ஆவார். கணவர் இயற்கை எய்தியதால் தன் ஒரே மகள் சுசிலாவுடன் தாய் வீட்டோடு இருந்து தம்பி வேங்கடசாமிக்கு உறுதுணையாக விளங்கினார்.

மயிலை சீனி. வேங்கடசாமி, மோட்டார் உதிரிப் பாகம் விற்கும் கடை ஒன்றில் எழுத்தராகச் சிலகாலம் பணியாற்றினார். பின் அப்பணியை விடுத்து 1925இல் நீதிக்கட்சியின் "திராவிடன்" இதழில் துணை ஆசிரியர் ஆனார். திராவிடன் இதழில் இவர் பல கட்டுரைகளை எழுதினார். சவுபாக்கியம், பகுத்தறிவு, ஈழகேசரி, குடியரசு, தமிழ்நாடு ஆகிய இதழ்களில் இவரது கட்டுரைகள் வெளிவந்தன.

இதழ்களுக்காகப் பணியாற்றியபோது தகவல் திரட்டுதல், செய்திகளைத் தொகுத்தல், பகுத்தல் ஆகியவற்றில் இவருக்குக் கிடைத்த பட்டறிவு பிற்காலத்தில் இவர் பல நூல்களை இயற்றுவதற்கு வாயில்களாக விளங்கின.

நீதிக் கட்சியின் காலகட்டத்தில் பேச்சிலும் எழுத்திலும் மக்களுக்கு மூட நம்பிக்கைகளைக் கட்டறுத்தல், உள்ளதை

உள்ளவாறு சான்றுடன் செய்திகளை எளிமையாகக் கூறுதல், ஆகிய நெறிமுறைகள் உயர் பண்புகளாகக் கருதப்பட்டன. அவ்வுயர் பண்புகள் மயிலை சீனி. வேங்கடசாமியின் பிற்கால நூலாராய்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றன. அதனால், இவர் பிற ஆய்வாளர்களினின்றும் தனிச்சிறப்பு பெற்றவராய்த் திகழ்ந்தார்.

திராவிடன் இதழில் ஆசிரியராக இருந்து பின்னர்ப் பள்ளி ஆசிரியப் பயிற்சியை முடித்தார். தம் இல்லம் அமைந்திருந்த தெருவிலே செயற்பட்ட சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் ஆனார். ஆசிரியப் பணியில் ஓய்வு நேரம் மிகுதியாக இருப்பதை உணர்ந்தார்.

மயிலை சீனி. வேங்கடசாமி திராவிடனில் துணை ஆசிரியரானது முதலே பல ஆண்டுகளாகக் குஞ்சிதம் குருசாமி அவர்களின் குடும்ப நண்பராக இருந்தார். பெரியாரின் தளபதியான குத்தூசி குருசாமியின் நட்பினால், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காணும், பேசும், எழுதும் திறனை இவர் வளர்த்துக்கொண்டார்."

இந்த வாய்ப்பு; இவரது தனிப்பட்ட வாழ்விலும் ஆராய்ச்சிப் பணியிலும் நடுநிலை பிறழாத மனநிலையையும், சுயமரியாதையையும் காத்துக்கொள்ள உதவியது.

கிறித்துவக் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் திரு. சற்குணரிடம் மயிலை சீனி.வே. தமிழ் இலக்கண இலக்கியங்கள் அனைத்தையும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்தார். "நினைப்பதை நூல் வடிவில் எழுதுக" என என்னை முதலில் ஊக்கப்படுத்தியவர் சற்குணர்தாம் எனத் தீபம் இதழில் நா. பார்த்தசாரதியின் (1970 மார்ச்சு - தீபம்) பேட்டியில் கூறியுள்ளார்.

மயிலாப்பூரிலிருந்து பல்லாவரம் பலமுறை நடந்து சென்று தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரைச் சந்தித்து அவருடன் பல மணி நேரம் உரையாடித் தம் ஐயங்களைப் போக்கிக் கொள்வார். அடிகளாரின் நட்பால் மயிலை சீனி. வேங்கடசாமி தம் எழுத்து நடையைத் திறம்பட வளர்த்துக்கொண்டார்.

தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனாரிடமும் மயிலை சீனி. வேங்கடசாமி இனிய நட்பை வளர்த்துக் கொண்டார். திரு.வி.க. அவர்கள் நகரில் எங்குச் சொற்பொழிவாற்றினாலும் அங்கெல்லாம் போய் மயிலை சீனி. வேங்கடசாமியும் கலந்துகொள்வார். இதனால் இவர் தமக்கிருந்த மரபுவழிப் புலமையை மேலும் வளப்படுத்திக் கொண்டார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் தனிச்சிறப்பு அனுமதி பெற்றுப் பல்கலைக்கழக நூலகத்திலும், மத்திய ஏட்டுச் சுவடி நூலகத்திலும், கன்னிமாரா நூலகத்திலும் தம் ஆய்வை மேற்கொண்டார்.

சென்னை எழுத்தாளர் சங்கத்தில் துணைத்தலைவர், தலைவர் பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றிப் பெருமை பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் பல தொடர்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் கட்டாய இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டார்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி அவர்கள் செயற்படுத்திய 49 புலவர் அடங்கிய பெருங் குழுவினரில் மரபுவழிப் புலவர் ஆக மதிக்கப்பெற்றார். உயர்பட்டம் பெற்ற அறிஞர்களிடையே பள்ளி இறுதிவகுப்பை முடித்த மயிலை சீனி. வேங்கடசாமி ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், துளு, கன்னடம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுத் தனித்தன்மையுடன் விளங்கினார்.

இலண்டன் பல்கலையில் பயின்ற இலங்கை சுவாமி விபுலானந்தருடன் மயிலை சீனி. வேங்கடசாமிக்கு இருந்த நட்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. இலங்கை பௌத்தத் துறவி தருமரத்தின தேரோ என்பவரும் மயிலை சீனி. வேங்கடசாமியைக் காண வந்துள்ளார். இவர்களது நட்பினால் பௌத்த சமயங்கள் பற்றிய உண்மைகளையும், மயிலை சீனி. வேங்கடசாமி அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

மயிலை சீனி. வேங்கடசாமி பௌத்த, சைன சமயங்களின் ஆய்வில் திளைத்தபோது தமிழக மலைக் குகைகளிலும் பாறைகளிலும், கோவிற் சுவர்களிலும் பொறிக்கப்பட்ட எழுத்துகளை இனங்கண்டு தெரிவித்தார். பழந்தமிழ் எழுத்து, பிராமி எழுத்து, வட்டெழுத்து, தற்காலச் சோழர் எழுத்து, வடக்கு பிராமி, தெற்கு பிராமி, குறியீடுகள் ஆகியவற்றைக் கண்டு ஊர் ஊராய், கோவில் கோவிலாய், மலை மலையாய்ச் சுற்றிச் சுற்றிச் சோர்விலும் தமிழ்ப் பணியில் திளைத்து இன்பம் கண்டவர் மயிலை சீனி. வே. அவர்கள்.

மயிலை சீனி. வேங்கடசாமி இளமை முதற்கொண்டே தம் தமக்கையார் கனகவல்லியின் பராமரிப்பில் வளர்ந்துவந்துள்ளார். கனகவல்லி அவர்கள் 1961இல் இயற்கை எய்தினார். தமக்கும் தம் பெயர்த்திகளுக்கும் வேண்டிய உணவு மற்றும் உடல்நலம்

பேணும் செயற்பாடுகளையும் குடும்பச் சுமையையும் கவனிப்பதிலேயே தம் வாழ்நாளில் இவர் பெரும்பகுதியைச் செலவிட்டுள்ளார்.

தம் தமக்கையாரின் ஒத்துழைப்பு இருந்ததால்தான் இவரால் தம் ஆய்வுப்பணியில் அறிஞர் பட்டம் பெற முடிந்தது. தமக்கையாரின் பெயர்த்திகளை வளர்க்கும் பொறுப்பையும், தமிழாய்வில் தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும் அளிக்க வேண்டிய படைப்புகளை உருவாக்கும் உயரிய நோக்கமும் கொண்டிருந்த இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. இளமையிலேயே பெற்றோரை இழந்த அழகம்மை, அன்புமணி ஆகியோர்க்குக் காப்பாளர் ஆனார்.

இவ்விரு பெயர்த்திகள்தாம் மயிலை சீனி. வேங்கடசாமியின் இறுதிக் காலம் வரை இவருடன் இருந்தவர்கள். இவருடைய பல்வேறு ஆய்வுப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து ஒத்துழைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதே.

தாத்தா மயிலை சீனி. வேங்கடசாமி நலிவுற்ற போதெல்லாம் மருத்துவரிடம் காட்டிக் குணப்படுத்தி இவரை 80 ஆண்டுக்காலம் வரை வாழச்செய்த பெருமை இவர் பெயர்த்திகள் இருவரையே சாரும்.

தமிழ் ஆய்வாளர்க்கும் பிற துறை ஆய்வாளர்க்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கட்கு அறிஞர். வ.சுப. மாணிக்கம் துணைவேந்தராக இருந்த காலத்தில் மதுரைப் பல்கலைக்கழகம் 29.3.1980இல் "பல்கலைக் கழகப் பேரவைச் செம்மல்" எனும் தகுதியைத் தந்து பெருமைப்படுத்தியது. சுயமரியாதைக் கொள்கையாளரான

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தம் விருப்பப்படியே தம் இருபெயர்த்திகளுக்கு 2. 2. 1977இல் பல்லாவரம் காளத்திநாதன் துணையுடன் சுயமரியாதைத் திருமணம் நடத்தினார். அதனால், இவர் உள்ளமும் உடலும் நன்னிலை அடையத் தொடங்கின. சமண முனிவர்போல வாழ்ந்த இவர், தமிழ் உள்ளளவும் தமிழுக்காகப் பாடுபட்டவர் என்ற பெருமையைப் பெற்ற இவர் 8-5-1980இல் இயற்கை எய்தினார்.

## ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் நூல்கள்

1. கிறித்துவமும் தமிழும்
2. பௌத்தமும் தமிழும்
3. சமணமும் தமிழும்
4. மகாபலிபுரத்து ஜைன சிற்பம்
5. இறையனார் களவியல் ஆராய்ச்சி
6. பௌத்தக் கதைகள்
7. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்
8. மகேந்திரவர்மன்
9. நரசிம்மவர்மன்
10. மூன்றாம் நந்திவர்மன்

11. புத்த ஜாதகக் கதைகள்

12. அஞ்சிறைத்தும்பி

13. கௌதம புத்தர்

14. மறைந்துபோன தமிழ் நூல்கள்

15. சாசனச் செய்யுள் மஞ்சரி

16. மனோன்மணீய ஆராய்ச்சியும் உரையும்

17. பழங்காலத் தமிழ் வாணிகம்

18. கொங்கு நாட்டு வரலாறு

19. களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

20. இசைவாணர் கதைகள்

21. உணவு நூல்

22. துளு நாட்டு வரலாறு

23. சமயங்கள் வளர்த்த தமிழ்

24. சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்

25. சேரன் செங்குட்டுவன்

26. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

27. சங்க காலச் சேர சோழ பாண்டியர்

28. சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள்

29 நுண் கலைகள்

30. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

31. சிறுபாணன் சென்ற பெருவழி

32. மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாசம் (மொழிபெயர்ப்பு)

33. பழந்தமிழும் பல்வகைச் சமயமும்

34. பிறவெளிவந்த நூல்கள், கதைகள், இதழியல் கட்டுரைகள்.

# ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியின் சிந்தனைகள்

★ என் குடும்பத்தில் இரண்டு அருமைக் குழந்தைகள் மறைந்து விட்டதைப்போல, தமிழிலக்கியக் குடும்பத்திலும் சில குழந்தைகள் மறைந்துபோனதை அப்போது (யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டப்பட்ட நூல்களில் சில இறந்து மறைந்துபோன நூல்களாக ஒன்பதைப் பார்த்தபோது) கண்டேன். என் மனத்தில் அப்போது புதியதோர் எண்ணம் தோன்றிற்று. தமிழன்னை எத்தனை குழந்தைகளை - தமிழ் நூல்களை இழந்து விட்டாள் என்பதைக் கணக்கெடுக்க வேண்டும் என்னும் எண்ணந்தான் அது.

- மறைந்துபோன தமிழ்நூல்கள், முன்னுரை

★ சமயப் பகையினால் சில பல நூல்கள் அழிந்தவை போலவே, மூடக் கொள்கையினாலும் பல நூல்கள் அழிந்தன. பதினெட்டாம் பெருக்கு, கலைமகள் விழாவாகிய சரசுவதி பூசை, மாசி மகம் போன்ற காலங்களில் ஏட்டுச் சுவடிகளைக் கடலிலும் ஆற்று வெள்ளத்திலும் போடுகிற வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட இந்த மூடவழக்கம் சமீப காலம் வரையிலும் இருந்தது. கல்வி அறிவில்லாதவர்கள், தங்கள் வீடுகளில் தமது முன்னோர் சேமித்து வைத்த ஏட்டுச் சுவடிகளைக் கற்கும் ஆற்றல் இல்லாமல், அச்சுவடிகளை ஆற்று வெள்ளத்தில் விட்டனர். இது போன்ற மூடத்தனம் உலகத்திலே எந்த நாட்டிலும் காணமுடியாது. சிலர் ஏட்டுச் சுவடிகளை அடுப்பில் இட்டு எரித்ததும் உண்டு. குரங்கு கையில் பூமாலை கிடைத்தாற்போல, கல்வியற்றவர் கையில் கிடைத்த ஏட்டுச் சுவடிகள் இவ்வாறு அழிந்தன.

- மறைந்து போன தமிழ் நூல்கள், ப. 364

★ மிகப் பழைய காலந்தொட்டு நாகரிகம் பெற்று வாழ்ந்துவருகிற தமிழர்கள் தமக்கென்று அழகுக் கலைகளை யுண்டாக்கிப் போற்றி வளர்த்துவருகிறார்கள்.

★ தமிழர் நாகரிகம் மிகப் பழமையானது என்பதைச் சரித்திரம் அறிந்த அறிஞர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

★ அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூறுதல் வேண்டும். அவனை முழு நாகரிகம் பெற்றவன் என்று கூறுதல் முடியாது.

★ அழகுக் கலைகளை யுண்டாக்கி, உயரிய நிலையில் வளர்த்துப் போற்றிப் பாதுகாத்து வந்த தமிழ்ச் சமூகத்தின் பரம்பரையினர், இக் காலத்தில் அவை மறைந்துபோகும் அளவுக்கு அவற்றை மறந்து வாழ்வது நாகரிகச் செயலாகாது. தம் மூதாதையர் வளர்த்துப் போற்றிய கலைகளைச் சிறிதளவாவது அறிந்து, போற்றிப் பாதுகாக்க வேண்டுவது அவர் வழி வந்த பரம்பரையினரின் நீங்காக் கடமையும் உரிமையுமாகும்.

– தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், முகவுரை.

★ இந்நூலைப் (மகேந்திரவர்மன்) படிப்போர் செய்யவேண்டிய கடமையுண்டு. மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோயில்களையும் அவற்றில் உள்ள சிற்பங்களையும் கண்டு களித்து, அக் கலைச்செல்வங்களை அழிவுபடாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும் கடமையும் இதைப் படிப்போர்களைச் சார்ந்தன. ஏனென்றால், நம் நாட்டுக் கலைச்செல்வங்கள் நமக்குச் சொந்தமானவை என்பதை நம்மவரில் பெரும்பாலோர் இன்னும் உணரவில்லை. இப் பொறுப்பை உணர்ந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இக்கலைச் செல்வங்களைப் பொன்னேபோல் போற்றவேண்டும்.

– மகேந்திரவர்மன், பக். 9–10.

★ ஒரு மொழியிலிருந்து ஒரு சொல்லைக் கொள்ள வேண்டுமானால், அது அயல் நாட்டு மொழியாக இருந்தாலும், அச்சொல் சமஸ்கிருத மொழியில் சென்ற பிறகுதான், சமஸ்கிருதத்திலிருந்து மற்ற மொழிக்குக் கொள்ள வேண்டும் என்று மூடத்தனமான ஒரு கொள்கை,

சமஸ்கிருதத்தில் மூடப்பக்தியுள்ள, ஆராய்ச்சியற்ற சில பண்டிதர்களின் கொள்கையாக இக்காலத்திலும் இருந்து வருகிறது. சமஸ்கிருத மொழியைப் பற்றி இருந்து வருகிற சில மூடக்கொள்கைகளில் இதுவும் ஒன்று. இத்தகைய மூடக்கொள்கை, ஆராய்ச்சி இல்லாத சமஸ்கிருதப் பண்டிதரிடத்தில் இருப்பது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், பல்கலைக் கழகங்களில் பேராசிரியர் இடத்தில் அமர்ந்துகொண்டு ஆராய்ச்சி செய்கிறேன் என்று நூல் எழுதுகிறவர்கள், சிறிதும் ஆராய்ந்து பாராமல் இவ்வாறு எழுதுவது அறிவுடையல்ல. இது ஆராய்ச்சியாகாது.

- சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பக். 27, 28

★ வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலிருந்து சில கருத்துகளைத் தொல்காப்பியர் எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று அவர்களில் சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரம் என்ன காட்டுகிறார்கள் என்றால், வடமொழி நாட்டிய சாஸ்திரத்தில் தொல்காப்பியர் கூறுகிற கருத்துகள் காணப்படுகின்றன என்பதுதான்! தொல்காப்பியத்தில் கூறப்படுகிற கருத்துகள் வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலே காணப்படுவதால், அவை தொல்காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்று கூறலாமல்லவா? ஆனால், இவர்கள் அப்படிக் கூறுவதில்லை. சமஸ்கிருதத்திலிருந்துதான் கருத்துகள் மற்ற மொழிகளில் சென்றிருக்கவேண்டும் என்னும் மூட நம்பிக்கைதான் இவர்களுக்கு ஆதாரம்.

- சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பக். 45

★ தொல்காப்பியம் கூறுகிற தமிழரின் வருணன், ஆரியர் வணங்கிய வருணனைக் கடனாகப் பெற்ற தெய்வம் அன்று.

ஆதிகாலத்தில் இருந்து திராவிட இனத்தார் வழிபட்டு வந்த வருணனைத் தமிழர் வணங்கினார்கள். அத் தெய்வத்தைத்தான் தொல்காப்பியர் கூறினார். இவற்றையெல்லாம் ஆராயாமல், ஆரிய வேதத்தில் வருணன் கூறப்படுகிறபடியால், அந்த வருணனைத் தமிழர் ஏற்றுக்கொண்டு வணங்கினார்கள் என்று கூறுவதும், வருணனைக் கூறுகிற தொல்காப்பியம், ஆரிய திராவிடர் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல் என்று கூறுவதும் ஆழ்ந்து பாராமல் மேற் போக்காகக் .கூறுகிற போலி ஆராய்ச்சியாகும். எனவே, இந்திரன், வருணன் என்னும் தெய்வங்களைக் கூறுகிற தொல்காப்பியம் பிற்காலத்து நூல் என்று சிலர் கூறுவது ஏற்கத்தக்கதன்று.

சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பக். 78, 79

அய்யன் வள்ளுவனின்
அடிதொடரச் சூளுரைப்பீர்!
உய்யவழி வேறில்லை
குறளைத் தோள்சுமப்பீர்!

- மாண்புமிகு தமிழக முதல்வர்
ஐந்தமிழ் அறிஞர் **கலைஞர்**